


**18. 12. 2025**

தலைப்புச் செய்திகள்

- இந்தியா - ஓமன் இடையிலான வர்த்தக உறவுகள் புதிய உச்சத்தை எட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான கிராமப்புற வேலை உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா 2025 மக்களவையில் இன்று நிறைவேறியது.
- சாலை விபத்து உயிரிழப்பை தடுக்கும் வகையில் அனைத்து மாநிலங்களுடன் இணைந்து நவீன ஆம்புலன்ஸ் சேவை வசதி கொண்டுவரப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின்கட்காரி கூறியுள்ளார்.
- அமெரிக்க வரி விதிப்பால் தமிழ்நாடு ஏற்றுமதி துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு விரைந்து தீர்வு காண முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் பிரதமரை கேட்டுக்கொண்டுள்ளார்.
- சீனாவில் நடைபெறும் உலக டூர் ஃபைனல்ஸ் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

****************

பிரதமர்

இந்தியா - ஓமன் இடையிலான வர்த்தக உறவுகள் புதிய உச்சத்தை எட்டும் என்றும் பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்திய ஓமன் வர்த்தக உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய பிரதமர், இருநாடுகளுக்கிடையேயான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் நம்பிக்கை மற்றும் ஆற்றலை வலுப்படுத்துவதோடு, வர்த்தகம், முதலீடு வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இருநாடுகளுக்கிடையேயான நீண்டகால நட்புறவு எக்காலத்திற்கும் நீடித்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து ஓமன் மஸ்கட்டில் இந்திய வம்சாவளியினர் மற்றும் மாணாக்கரிடையே உரையாற்றிய அவர், விழாக்கள், மரபுகள் புதிய எண்ணங்களை வெளிக்கொணருவதாக கூறினார்.

இந்தியாவின் பன்முக தன்மை நம் கலாச்சாரத்தின் அடித்தளமாக திகழ்கிறது என்று பிரதமர் தெரிவித்தார்.

பிரதமர் இன்று, ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக்குடன் மஸ்கட்டில் இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

மூன்று நாடுகள் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் இன்று தாயகம் திரும்புகிறார்.

***************

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான கிராமப்புற வேலை உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா 2025 மக்களவையில் இன்று நிறைவேறியது.

இம்மசோதா குறித்த விவாதத்திற்கு அவையில் இன்று பதில் அளித்து பேசிய மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்தியதாக கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் ஆட்சி காலத்தில் 2 லட்சத்து 13 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை விடுவித்ததாகவும், ஆனால் திரு.நரேந்திரமோடி அரசு 8 லட்சத்து 53 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் வழங்கியதாகவும், குறிப்பிட்டார்.

இதனிடையே எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

***************

நிதின்கட்காரி

நாட்டில் சாலை விபத்துகளின் எண்ணிக்கை உயர்வது குறித்து மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின்கட்காரி கவலை தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்தம் தொகுதிகளில் இதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆண்டுதோறும் 5 லட்சம் சாலை விபத்துகள் நிகழ்வதாகவும், சராசரியாக ஒரு லட்சத்து 80 ஆயிரம் உயிரிழப்புகள் நேரிடுவதாகவும் குறிப்பிட்டார்.

உரிய காலத்தில் மருத்துவ உதவி கிடைப்பதன் மூலம் ஆண்டுதோறும் 50 ஆயிரம் விபத்து உயிரிழப்புகள்

தடுக்கப்படுவதாக எயிம்ஸ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விபத்து நேரிட்டவுடன் விரைந்து மருத்துவ உதவி கிடைக்கும் வகையில் அனைத்து மாநிலங்களுடன் இணைந்து நவீன ஆம்புலன்ஸ் சேவை வசதி கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

****************

ஜிதேந்திரா சிங்

நாட்டின் அடுத்த 3 ஆண்டுகளில் மாவட்ட மருத்துவமனைகளில் 372 புற்று நோய் பராமரிப்பு மையங்கள் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக பிரதமர் அலுவலக இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரா சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் நடப்பு நிதியாண்டில் 200 மையங்கள் அமைக்கப்பட உள்ளதாக கூறினார்.

****************

ஜூவல் ஓரம்

நாடுமுழுவதும் பழங்குடியினர் மாணாக்கரின் கல்வி தரத்தை உயர்த்தும் வகையில் 440 ஏகலைவா உண்டு உறைவிட பள்ளிகள் செயல்பட்டு வருவதாக பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.ஜூவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், 728 ஏகலைவா உண்டு உறைவிட பள்ளிகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக கூறினார்.

பழங்குடியின மக்களின் நலனுக்காக பல்வேறு நல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பழங்குடியின கிராமங்களை தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் 63 ஆயிரம் கிராமங்களுக்கு 80 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

****************

ராம்மோகன் நாயுடு – மக்களவை

உதான் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் விமான நிலையங்களின் எண்ணிக்கை 160ஆக உயர்ந்துள்ளது என மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு.ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்து பேசிய அவர், கடந்த 2014ஆம் ஆண்டு 74 விமான நிலையங்கள் இருந்ததை சுட்டிக்காட்டினார்.

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு விமான ஓடுபாதைகளை விமான செயல்பாட்டு மையங்களாக மாற்றியமைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் உத்திரகாண்டில் ஹெலிகாப்டர் இயக்கத்திற்கு இத்திட்டம் வழிகோலுவதாக கூறினார்.

உதான் திட்டம் அடுத்த 10 ஆண்டுகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றார்.

****************

மன்சூக் மாண்டவியா

நாட்டில் அடுத்த நான்காண்டுகளில் பாதுகாப்பு துறை ஏற்றுமதி 25 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 50 ஆயிரம் கோடி ரூபாயாக இரட்டிப்பாகும் என்று மத்திய இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதன்மூலம் உலக அளவில் பாதுகாப்புத்துறையில் இந்தியா முக்கிய இடத்தை பிடிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் பாதுகாப்புத்துறை உற்பத்தியை வரும் 2029ஆம் ஆண்டிற்குள் 3 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

****************

மீனவர்கள்

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த பங்களாதேஷை சேர்ந்த 35 மீனவர்களை இந்திய கடலோர காவல்படை நேற்று கைது செய்துள்ளது.

வங்ககடல் பகுதியில் சந்தேகத்திற்குரிய இரு படகுகளில் இருந்து, கைது செய்யப்பட்ட இவர்கள் மேற்கு வங்க மாநிலம் ஃப்ரைசர் கஞ்ச் மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

அத்துமீறி நுழைந்ததாக குற்றம்சாட்டப்பட்ட இவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுகின்றனர்.

****************

முதலமைச்சர் கடிதம்

இந்திய பொருட்கள் மீதான அமெரிக்க வரி விதிப்பால் தமிழ்நாடு ஏற்றுமதி துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை இருதரப்பு ஒப்பந்தம் மூலம் விரைந்து களைந்திட வேண்டும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு அவர் இன்று எழுதிய கடிதத்தில் திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு நாளொன்றுக்கு 60 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

வேலூர் ராணிப்பேட்டை திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள காலணி உற்பத்தி நிறுவனங்களிலும் இதுபோன்ற சூழல் காணப்படுவதாக கவலை தெரிவித்தார்.

இதன்மூலம் லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள் பறிபோகும் நிலை காணப்படுவதாகவும், எனவே இந்த வரி சிக்கலை விரைவில் தீர்க்க முன்னுரிமை அளிக்குமாறு முதலமைச்சர் பிரதமரை கேட்டுக்கொண்டுள்ளார்.

****************

முதலமைச்சர் தொடர்ச்சி

தமிழக அரசு மகளிர் மேம்பாட்டிற்காக பல்வேறு நல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

சென்னை கொளத்தூரில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை இன்று திறந்து வைத்து பேசிய அவர், இத்தொகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டார்.

முன்னதாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் ஜி.கே.எம்.காலனி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மற்றும் அமுதம் அங்காடி கட்டிட பணிகளை இன்று தொடங்கிவைத்தார்.

17 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இப்பணிகள் நடைபெற உள்ளன.

அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் 23 வகுப்பறைகள், 5 ஸ்மார்ட் வகுப்பறைகளும் நான்கு நவீன ஆய்வகங்களும் அமைக்கப்பட உள்ளன.

****************

துணை முதலமைச்சர்

சென்னை நுங்கம்பாக்கத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி பொருட்களின் விற்பனை கண்காட்சியை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் பண்டிகை காலங்களில் பொதுமக்களும், தனியார் நிறுவனங்களும் சுய உதவிக்குழுக்களின் பொருட்களை வாங்கி அவர்களுக்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

வரும் 4ஆம் தேதிவரை இக்கண்காட்சி, விற்பனை நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

****************

வரைவு வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் வரைவு வாக்காளர் பட்டியல் நாளை வெளியிடப்படுகிறது.

வாக்காளர்கள் தங்கள் விவரங்களை அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்த்தல் மற்றும் திருத்தங்கள் தொடர்பான படிவங்களை பூர்த்தி செய்து வரும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெறும் உதவி மையங்களில் வழங்கிடுமாறு மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சித்தலைவருமான திரு.பிரதாப் அறிவுறுத்தியுள்ளார்.

***************

இருவரி

விருதுநகர் மாவட்டத்தில் சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவில் மாநில அமைச்சர்கள் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன், திரு.தங்கம் தென்னரசு ஆகியோர் 146 பயனாளிகளுக்கு ஒரு கோடியே 94 லட்ச ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை இன்று வழங்கினர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் பங்கேற்று பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை வழங்கினார்.

***************

கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்ட நீர்நிலைகளில் சூறைக்குருவிகள் ஏராளமாக காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

உதகை

மண் வளத்தை மீட்டெடுக்கும் மத்திய அரசின் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான கருத்தரங்கு நாடுமுழுவதும் நடைபெற்று வருகிறது.

இதன்ஒருபகுதியாக நீலகிரி மாவட்டம் கூக்கல்தொரை கிராமத்தில் நடைபெற்ற கருத்தரங்கு குறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***************

இருவரி

பெரம்பலூர் மாவட்டம் எறையூர் அரசு பொது சர்க்கரை ஆலை நவீனமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, மெகாவாட் மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் நேற்று வரை 6 லட்சம் சரக்கு பெட்டகங்கள் கையாளப்பட்டுள்ளதாக துறைமுக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நாமக்கல் அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் மின்கம்பி உதவியாளர், தகுதி தேர்வு வரும் 27, 28 தேதிகளில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

தஞ்சை தேசிய உணவு தொழில்நுட்ப மேலாண்மை நிறுவனத்தில் 31ஆவது உணவு விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் கருத்தரங்கம் இன்று தொடங்குகிறது.

தேனி மாவட்டத்தில் ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் தொடர்பாக ஒருநாள் விழிப்புணர்வு முகாம் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரஞ்சீத்சிங் தெரிவித்துள்ளார்.

****************

## பேட்மிண்டன்

சீனாவில் நடைபெறும் உலக டூர் ஃபைனல்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் குரூப் ஆட்டத்தில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை - இந்தோனேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

****************

## ஆசிய கோப்பை கிரிக்கெட்

துபாயில் நடைபெறும் 19 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் அரையிறுதியில் இந்தியா நாளை இலங்கையை எதிர்கொள்கிறது.

மற்றொரு அரையிறுதியில் பங்களாதேஷ் பாகிஸ்தானுடன் மோதுகிறது.

இறுதிப்போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

****************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது